மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,59,60,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

8. அறிவிப்பு—அலுவல் ஆய்வுக்குழு முடிவுபற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதுபற்றி கீழ்க் கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன—

8—8—1977—திங்கட்கிழமை.

28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

9—8—1977—செவ்வாய்க்கிழமை.

35—உணவுப் பொருள் வழங்கல்.

56—பல்வகை மூலதனச் செலவு.

10—8—1977—புதன்கிழமை.

10—பால் வழங்கு திட்டங்கள்.

20—வேளாண்மை.

49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

11—8—1977—வியாழக்கிழமை.

29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்.

33—வீட்டுவசதி.

34—நகர்ப் பகுதி வளர்ச்சி.

12—8—1977—வெள்ளிக்கிழமை.

3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.

39—சாலைகளும், பாலங்களும்.

40—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்கு வரத்து.

53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

54—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்கு வரத்து குறித்த மூலதனச் செலவு.

13—8—1977—சனிக்கிழமை.

18—மருத்துவம்.

19—பொதுச் சுகாதாரம்.

48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு.

14—8—1977—ஞாயிற்றுக்கிழமை.

விடுமுறை நாள்.

15—8—1977—திங்கட்கிழமை.

சுதந்திர தினம்—விடுமுறை நாள்.

16—8—1977—செவ்வாய்க்கிழமை.

13—நீதி நிர்வாகம். 1½ மணி நேரம்.

14—சிறைச்சாலைகள்.

25—சின்கோனா. 2 மணி நேரம்.

45—காட்டுவளத் துறை.

55—காட்டுவள மூலதனச் செலவு.

17—8—1977—புதன்கிழமை.

8—தேர்தல்கள்.

9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

11—மாவட்ட நிர்வாகம்.

12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து-சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

18—8—1977—வியாழக்கிழமை.

காமராஜ் அவர்களின் உருவப்படத் திறப்பு.
(பேரவைக் கூட்டம் அன்று இல்லை)

19—8—1977—வெள்ளிக்கிழமை.

36—பாசனம்.

37—பொதுப்பணிகள்—கட்டிடங்கள்.

38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்.

[பேரவைத் தலைவர்] [1977 ஆகஸ்ட் 5

51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

52—பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

திரு. துரை முருகன் : பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியை நான் குறை கூறவில்லை. பொதுப்பணித் துறை, காவல் துறை போன்றவற்றிற்கு ஒரு நாள் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். நிறைய புது உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் தொகுதிபற்றிப் பேசுவார்கள். முக்கியமான டாப்பிக்ஸ்க்கு இரண்டு நாட்கள் ஒதுக்க வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

20—8—1977—சனிக்கிழமை.

24—தொழில்கள்.

43—பல்வகை

21—8—1977—ஞாயிற்றுக்கிழமை.

—விடுமுறை.

22—8—1977—திங்கட்கிழமை.

21—மீனளம்.

23—கூட்டுறவு.

23—8—1977—செவ்வாய்க்கிழமை.

15—காவல் துறை.

16—தீயணைப்புப் பணிகள்.

24—8—1977—புதன்கிழமை.

22—கால்நடை வளர்ப்பு. 1½ மணி நேரம்.

30—சமூக நலன்கள்.

26—கைத்தறியும் துணித் தொழிலும். 1½ மணி நேரம்.

27—கதர்.

மற்ற மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி.

(Guillotine) வாக்கெடுப்புக்கு விடப்படும்.

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல்.

1977 ஆகஸ்ட் 5] [பேரவைத் தலைவர்]

25—8—1977—வியாழக்கிழமை.

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—ஆய்வுசெய்தலும் நிறைவேற்றுதலும்.

26—8—1977—வெள்ளிக்கிழமை. அரசு சட்ட முன்வடிவுகள்.

27—8—1977—சனிக்கிழமை.

வழக்கம்போல் அவை காலை 9 மணி முதல் கூடும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளங்கோவன் அவர்கள் காலையில் பேசும்போது சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்தில் * என்றிருப்பதாக அவர்கள் விளையாட்டாக சொன்னாலும் பத்திரிகைகளில் அது . . .

திரு. ஏ. ரகுமான் கான்: பத்திரிகைகளில் பிரின்ட் ஆகிவிட்டதாக அறிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது நல்லது. ஆகவே அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முருகன்: நான் சொன்னது என்னவாயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டி கூடி முடிவு எடுத்தது. நீங்கள் ஒருவர் சொன்னால் எப்படி?

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-10 மணிக்கு ஒத்திவைக்கப்பற்றது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 2-09—2-10 இல் சில சொற்கள் அகற்றப்பெற்றுள்ளன.